# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1563 - 2008 අගෝස්තු 15 වැනි සිකුරාදා - 2008.08.15**

*1563 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 854 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 854 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற்கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, ஓகத்து 22 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, ஓகத்து 08 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

திருத்தம்

**பொலிஸ் திணைக்களத்தில் பெண் உதவிப் பொலிஸ் பரிசோதகர்**

மேலைநாட்டு வாத்தியக் குழுவுக்கான பொலிஸ் கான்ஸ்டபிள்/மேலைநாட்டு வாத்தியக் குழுவுக்கான பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகிய பதவிகளுக்கான ஆட்சேர்த்தல்

மேற்போந்த பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் தொடர்பாக 2008.06.27 ஆந் திகதிய இலக்கம் 1,556 ஆம் அரச வர்த்தமானி தொடர்பாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி ஆகிய 2008.07.27 ஆந் திகதியிலிருந்து மேலும் ஒரு மாதம் 2008.08.27 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

பொலிஸ் மாஅதிபர்.

8-491

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரச முகாமை உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்புக்கு நியமனம் செய்வதற்காக நடாத்தப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2008

அரச முகாமை உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்புக்கு நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் எழுத்துப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2008 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் பின்வரும் நகரங்களில் நடாத்தப்படும். போதிய அளவு விண்ணப்பதாரர்கள் தோற்றாத நகரங்களில் அப்பரீட்சை அதை அண்மித்துள்ள நகரத்தில் நடாத்தப்படும். இப்பரீட்சையை ஒத்திவைப்பதற்கோ இரத்துச் செய்வதற்கோ அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| பதுளை | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |

2. 2007.06.30 ஆந் திகதியில் அரச முகாமை உதவியாளர் சேவையில் நிலவுகின்ற, அதிஉயர் வகுப்பின் வெற்றிடங்களில் 35% ஐ இப்பரீட்சை பெறுபேறுகளின் பேரில் பூர்த்திசெய்யப்படும்.

3. **மாதச் சம்பள அளவுத்திட்டம்.**- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 6/2006 (iv) இல் MN 07/2006 – A சம்பளத் தொகுதி இப்பதவிக்கு உரித்தாவதுடன் அதன்படி - ரூபா 20,030 – 11 x 365 – 18 x 500 = 33,045 ஆகும்.

4. **தகைமைகள்.**- 2007.06.30 ஆந் திகதிக்கு உடன் முந்திய 5 ஆண்டு காலப்பகுதிக்குள் முனைப்பான மற்றும் திருப்திகரமாக சேவையாற்றி உள்ள மத்திய அரசைச் சேர்ந்த,

(அ) அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு I இல் உள்ள அலுவலர்களும்,

(ஆ) குறைந்தபட்சம் சேவையில் 08 ஆண்டுகளுக்கு குறையாத முனைப்பான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இல் உள்ள அலுவலர்களும்,

(இ) அரச முகாமை உதவியாளர் சேவையின் I ஆம் II ஆம் வகுப்புக்களில் உள்ள பட்டதாரி அலுவலர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர்கள் ஆவர்.

**குறிப்பு 1.**- திருப்திகரமான சேவைக்காலமும் முனைப்பான சேவைக்காலமும் என்பது சேவை பிரமாணக் குறிப்பின் 2:6, 2:7 ஆம் பந்திகளின்கீழ் வரைவிலக்கணப்படுத்தியுள்ளன.

5. **விண்ணப்பிக்கும் முறை.**- (அ) விண்ணப்பப்படிவத்தில் இலக்கம் 1.0 தொடக்கம் 5.0 வரை முதலாம் பக்கத்திலும் 6.0 தொடக்கம் 9.0 வரை இரண்டாம் பக்கத்திலும் மிகுதி 3 ஆம் பக்கத்திலும் அடங்கும் வண்ணம் தயாரித்தல் வேண்டும். அதற்கு ஏற்புடையதான தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தில் தெளிவாக நிரப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவ உருவில் 25.5 x 21 செ.மீ. அளவிலான ஒரு தனித்தாளின் (ஏ4 அளவின்) இரு பக்கங்களையும் உபயோகித்து பரீட்சார்த்தியினாலேயே தயாரிக்கப்படுதல் வேண்டும். பரீட்சார்த்தி எம்மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற உள்ளாரோ அதே மொழியில் விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் மொழி மூலம் தொடர்பான எதுவித மாற்றங்களையும் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பப்படிவங்களும் முழுமைபெறாது தகவல்கள் குறிப்பிட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் அறிவிப்பெதுவுமின்றி நிராகரிக்கப்படும். அந்த விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். மேலும் பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளது என்பதற்கு பரீட்சார்த்தியே கவனமாக இருத்தல் வேண்டும். அவ்வாறு மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

(ஆ) பரீட்சார்த்திகளால் பூர்த்திசெய்கின்ற விண்ணப்பப்படிவத்தை, அதன் நிழற்படப் பிரதிகளுடன் தமது திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தலைவரின் பரிந்துரையை பெற்றுக் கொண்டதன் பின்னர் நிழற்படப் பிரதியை சுயவிபரக் கோவையில் உள்ளடக்குதல் வேண்டும். அதன் பின்னர் அதன் மூலப்பிரதியை தமது

திணைக்களத் தலைவர் ஊடாக "பரீட்சை ஆணையாளர் நாயகம்", இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக 2008, செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். திணைக்களத் தலைவரால் அனுப்புகின்ற விண்ணப்பப் படிவத்திற்கு மேலதிகமாக விண்ணப்பப்படிவத்தின் வேறு எதுவித பிரதியையும் தனிப்பட்ட வகையில் அனுப்பிவைத்தலாகாது. அத்திகதிக்குப் பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒவ்வொரு விண்ணப்பமும் எல்லா அம்சங்களிலும் முழுமையானது என திணைக்களத் தலைவர்களால் உறுதிப்படுத்த வேண்டுமென்பதுடன் விண்ணப்பத்தில் உள்ள சான்றுரையையும் கையொப்பமிட வேண்டும். விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் அல்லது அத்திணைக்களத்தின் வேறு அலுவலர் ஒருவரின் தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பப்படலாகாது. விண்ணப்பங்களை வைத்து அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அரச முகாமை உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்பிற்கு நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2008" என்று தெளிவாக குறிப்பிட வேண்டும்.

(இ) (i) முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களிடம் இருந்து பரீட்சை கட்டணம் அறவிடப்பட மாட்டாது. அதாவது பொது எழுதுநர் சேவையின் அதிஉயர் வகுப்புக்கு நியமனம் செய்வதற்காக 1972, 1973, 1974, 1975, 1976, 1978, 1979, 1980, 1982, 1983, 1984, 1985, 1986, 1987, 1988, 1989, 1991, 1996. 1999 அல்லது 2001 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட பொது எழுதுநர் சேவையின் அதிஉயர் வகுப்பின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றாத விண்ணப்பதாரர்கள் இடமிருந்தும் 1985, 1996 ஆகிய ஆண்டுகளில் நடாத்தப்பட்ட அரச தட்டெழுத்தாளர் சேவையின் அதிஉயர் வகுப்புக்குரிய மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றாத விண்ணப்பதாரர்களிடமிருந்தும் 1996 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரச சுருக்கெழுத்தாளர் சேவையின் அதிஉயர் வகுப்பின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றாத விண்ணப்பதாரர்களிடமிருந்தும் 1999 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரச கணக்குப் பதியுநர் சேவையின்/அரச சிறாப்பர் சேவையின் அல்லது பண்டசாலை காப்பாளர் சேவையின் அதிஉயர் வகுப்பின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றாத விண்ணப்பதாரர்களிடமிருந்தும் 2006 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரச முகாமை உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்பின் மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சைக்கு தோற்றாத அலுவலர்களிடமிருந்தும் ஆகும்.

(ii) பரீட்சைக்கான கட்டணம் ரூபா 300 ஆகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்குமுன் இக்கட்டணத்தை அண்மித்துள்ள மாவட்டச் செயலகம்/கச்சேரி/பிரதேச செயலகத்திற்கு வருமானத் தலைப்பு 4000 – 20 – 03 – 20 – 13 இன்கீழ் வரவுவைப்பதற்காக செலுத்த வேண்டும். பணம் செலுத்தியமைக்காக பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் ஒட்டிவிட வேண்டும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது. பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் படப்பிரதி ஒன்றை தன்வசம் வைத்துக்கொள்ளல் பிரயோசனப்படலாம்.

(ஈ) முழுமையுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அல்லது அத்துடன் தொடர்பான ஓர் ஆவணம் தபாலில் தொலைந்துவிட்டதாகவோ தாமதமானதாகவோ கிடைக்கும் முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதிவரை விண்ணப்பம் தாமதப்படுவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகள் ஆவர்.

(உ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது.

6. **பரீட்சைக்கு அனுமதித்தல்.**- (அ) கிடைத்துள்ள விண்ணப்பங்கள் தொடர்பில் அந்தந்த பரீட்சார்த்திக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளை பரீட்சை நிலையத்திற்குப் பொறுப்பான மண்டப மேற்பார்வையாளருக்கு பரீட்சை தினத்தின்போது சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை சமர்ப்பிக்கப்படாத பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தி தனக்கென விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரும் பரீட்சை மண்டபத்திற்கு உரிய அனுமதி அட்டையை அம்மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றும் முதலாம் நாளில் மண்டப மேற்பார்வையாளருக்கு கையளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் கையாளவேண்டிய ஓர் விதிக்கோவை இவ்வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது. அச்சட்டவிதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்.

(இ) உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி, விண்ணப்பத்தை உரியவாறு பூர்த்திசெய்து விதித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரர்கள் யாவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்புவார்.

(ஈ) எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கு முன்னர் (குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னராவது) தனது அனுமதி அட்டை கிடைக்காவிட்டால் அது பற்றி "பரீட்சை" ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு உடனே அறிவிக்க வேண்டும். *(தந்தி முகவரி : "பரீட்சைகள்", பத்தரமுல்ல, பக்ஸ் இலக்கம் : 2784232 ஆகும்.)* பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை அனுப்பிய உடன் இலங்கை பரீட்சை திணைக்களம் அது தொடர்பாக பத்திரிகையில் அறிவிப்பொன்றை வெளியிடும். அறிவிப்பு வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்திய நிழற்படப் பிரதிகள், பதிவுசெய்த பற்றுச்சீட்டு, கொழும்பிற்கு வெளி இடம் என்றால் அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய பெக்ஸ் இலக்கம் குறிப்பிட்ட உங்களது கோரிக்கையின் நிழற்படப்பிரதி என்பவற்றை தம்வசம் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

**குறிப்பு.**- பரீட்சைக்காக அனுமதி வழங்கப்பட்டமை தகைமைகளை ஏற்றுக்கொள்ளும் சாதனமாக கருதுதல் ஆகாது. எவ்வாறாயினும் பரீட்சை ஆணையாளர் நாயகம் தனது தற்றுணிபின்படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றும் பொருட்டு தற்காலிகமாக அனுமதி வழங்கலாம். அதன்படி பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்படுகின்ற பரீட்சார்த்தி உரிமை பின்னராக உறுதிப்படுத்தப்படும். இல்லாவிட்டால் இரத்துச்செய்யப்படும்.

7. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலைய

மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

*8.* ***பிழையான தகவல்கள் அளிப்பதற்கான தண்டனை***.- (அ) இப்பரீட்சைக்குரிய ஒழுங்குவிதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் அதற்குத் தோற்றுவதற்கு தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் அளித்துள்ள தகவல்கள் பிழையானவை என பிற்காலத்தில் தெரியவந்தால் அல்லது வேண்டுமென்று ஏதேனும் ஒரு விடயத்தை மூடிமறைத்திருப்பதாக வெளிவந்தால் அவர் மேலும் ஒரு நியமனம் பெறுவதற்காக கவனத்திற் கொள்ளப்படாததுடன் இப்பரீட்சை காரணமாக வழங்கப்பட்டுள்ள ஒரு நியமனத்தை இல்லாதொழிக்கவும் அல்லது பதவி நீக்கத்திற்கும் ஆளாவார்.

*9.* ***பரீட்சை மொழி***.- இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் பொது எழுதுநர் சேவை/அரச தட்டெழுத்தாளர் சேவை/அரச சுருக்கெழுத்தாளர் சேவை/ அரச கணக்குப் பதியுநர் சேவை/ அரச சிறாப்பர் சேவை/ அரச பண்டசாலை காப்பாளர் சேவை ஆகியவற்றில் உட்சேர்வதற்காக போட்டிப் பரீட்சையில் தோற்றிய மொழிமூலம் அல்லது போட்டிப் பரீட்சையின்றி ஆட்சேர்ப்புச் செய்தவர்கள் தொடர்பில் சேவைக்கு சேர்வதற்காக அவர்கள் தகைமைபெற்ற மொழி மூலம் விடையளித்தல் வேண்டும்.

*10.* ***பாடத்திட்டம்***.- எழுத்துப் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

| *பாடம்* | *காலம் (மணித்தியாலங்கள்)* | *புள்ளிகள்* |
|---|---|---|
| 1. அலுவலக முகாமைத்துவம் | 02 மணித்தியாலம் | 100 |
| 2. அலுவலக முறைமைகள் | 02 மணித்தியாலம் | 100 |
| 3. தாபன நடைமுறைகள் | 02 மணித்தியாலம் | 100 |
| 4. அரச நிதி முகாமைத்துவம் | 02 மணித்தியாலம் | 100 |
| 5. பொது வினாத்தாள் | 1 1/2 மணித்தியாலம் | 100 |
| | | 500 |

*11.* ***நியமனத்திற்காக தெரிவுசெய்தல்***.- இப்பரீட்சையில் பெற்றுக்கொள்கின்ற மொத்தப் புள்ளிகளின் ஒழுங்கு வரிசைப்படி தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை குழுவொன்றின் முன்நிலைக்கு பரீட்சார்த்திகள் அழைக்கப்படுவர். அந்நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தெரிவுசெய்யப்படுகின்ற பரீட்சார்த்திகள் வெற்றிடங்கள் நிலவும் இத்தீவின் எப்பிரதேசத்திலேனும் அமைந்துள்ள அலுவலகமொன்றில் சேவையாற்றத் தயாராக இருக்க வேண்டும். இணைப்புச் செய்யப்படும் அலுவலகத்தில் நியமனத்தை ஏற்கமறுத்தால் அவரின் நியமனத்தை இரத்துச்செய்து அடுத்ததாக தகைமையடைந்துள்ளவர்களை ஒழுங்கு வரிசையாக அழைத்து வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

*12.* அரச சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் 2004, திசெம்பர் மாதம் 24 ஆந் திகதிய 1372/23 ஆம் இலக்க இலங்கை அரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள 2004.12.15 ஆந் திகதிய அரச முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பில் தற்போது மேற்கொண்டுள்ள அல்லது இனிவருங்காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் அமைவாக நியமனங்கள் செய்யப்படும்.

*13.* ***பாடத்திட்டம்***.- பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் பாடங்கள் பற்றிய அறிவு எதிர்பார்க்கப்படுகிறது :-

(1) *அலுவலக முகாமைத்துவம்*.- அமைப்புமுறைக் கட்டமைப்பு, அமைப்புமுறை கோட்பாடுகள், வேலைப்பகுப்பாய்வும் மதிப்பீடுகளும் தலைமைத்துவம், மேற்பார்வையும் தீர்மானம் எடுத்தலும், தொடர்பாடல், பொதுசனத் தொடர்பு, கூட்டிணைப்பும் பிரச்சினைகளைத் தீர்த்தலும்.

(2) *அலுவலக முறைமைகள்*.- அலுவலக முறைமையின் கோட்பாடுகள், அலுவலக நடவடிக்கை முறைகள், பதிவுகளும் கோவைப்படுத்தலும், படிவங்களை வடிவமைத்தலும் கட்டுப்பாடும், கடிதத்தொடர்பு, அலுவலக உபகரணங்களின் பயன்பாடு மீதான கட்டுப்பாடு, அலுவலக தளக்கோலமும் அதன் வளவும், தொழில் விவரணம், வேலை ஆய்வும் முறைகளின் ஆய்வும் வேலைச் சுமையை அளத்தல், அலுவலக தொழிற்பாட்டின் கையேடு.

(3) *தாபன நடைமுறைகள்*.- அரசாங்க சேவைக்கு ஆட்சேர்க்கும் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள், அரச உத்தியோகத்தர்களின் தாபன விடயங்கள், பெயர்வழிக் கோப்புகளைப் பேணுதல், அரச உத்தியோகத்தர்களின் நியமனம், இடமாற்றம், பதவியுயர்வு, சேவை முடிவுறுத்தல் என்பனவற்றுக்கான அதிகாரக் கையளிப்பு, நலனோம்பல் அரச உத்தியோகத்தர்களுக்கு உரித்தான சிறப்புரிமைகள், நிறுவன நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கத்தினால் இதுவரை வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள் பற்றிய பொது அறிவு பரீட்சிக்கப்படும்.

(4) *அரச நிதி முகாமைத்துவம்*.- வருடாந்த மதிப்பீடுகளும் கணக்கீட்டு உத்தியோகத்தரொருவரின் பொறுப்புக்களும், நிதிக் கட்டுப்பாடு, நிதிப் பொறுப்பைக் கையளித்தல், பணத்தைப் பெறுதல், கணக்கீடும் ஏற்றலும், கொடுப்பனவுகள், அரசாங்க பணத்தின் கட்டுக்காப்பு, கட்டுநிதிகள், வங்கிக் கணக்குகளும் விநியோகங்களும் சேவைகளும், கேள்வி நடைமுறைகள், களஞ்சிய செவ்வை பார்ப்பு, கணக்காய்வு வினாக்கள், அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் பேரேடுகள், வருமான செலவின சாரம்சம், வங்கி கணக்கிணக்கக் கூற்றும் நிதி முகாமையில் பயன்படுத்தப்படும் ஏடுகளும், அரசாங்க நிதி தொடர்பாக இதற்குமுன் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள் பற்றிய பொது அறிவு பரீட்சிக்கப்படும்.

(5) *பொது வினாத்தாள்*.- பொது நிர்வாகத்தின் இயல்பு, பொது நிர்வாகத்தின் கட்டமைப்பு, அரச கொள்கைகளும் சீர்திருத்தங்களும், அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள்,

மனித உரிமைகள் ஆணைக்குழு, குறைகேள் அதிகாரி (ஓம்பூட்ஸ்மன்), பொது முறைப்பாடுகளுக்கான பாராளு மன்றக் குழு, அலுவலக கலாச்சாரம், நன்னெறிகளும் விழுமியங்களும் முறையான அலுவலக சூழலை உருவாக்க லும், பதவியணியினரின் நலன்புரி நடவடிக்கைகளும், உத்தியோக மற்றும் சிவில் அந்தஸ்து மீதான சமூக அங்கீகாரம் அரச உத்தியோகத்தர்களின் கடப்பாடுகள்.

14. ஏதேனும் வெற்றிட எண்ணிக்கையை அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கும், இவ்வொழுங்கு விதிகளின்மூலம் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

15. இவ்வொழுங்கு விதிகளின் மூலம் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாக இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

டி. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2008, யூலை 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரச முகாமை உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்புக்கு நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2008**

Limited Competitive Examination for Appointment to Supra Class of the Public Management Assistants Service – 2008

வர்த்தமானி அறிவித்தலின் படி விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவ தற்கு உத்தேசிக்கும், இரண்டு நகரங்களை விருப்பத்தின்படி ஒழுங்கு வரிசையாகக் குறிப்பிடவும்.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| (1) | |
| (2) | |

(வர்த்தமானி அறிவித்தலில் முதலாம் பந்தியைப் பார்க்கவும்.)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி : [ ]

(சிங்களம்-2/தமிழ்-3/ஆங்கிலம்-4)
(உரிய எழுத்தை கூட்டினுள் எழுதவும்.)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : திரு./ திருமதி/ செல்வி :----.

   1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களு டன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

   1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

   1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

   2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

   2.2 கடமை முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----. (அனுமதி அட்டைகள் இம்முகவரிக்கு அனுப்பப்படும்.)

3. பால் :
(பெண்-1, ஆண்-0) [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்.)

4. விவாகமானவரா ?/விவாகமாகாதவரா ? :
விவாகமானவர்-1, விவாகமாகாதவர்-2 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

5. தேசிய ஆளடையாள அட்டை இல. : [ | | | | | | | | | ]

6. பிறந்த திகதி :
ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

   6.1 2007.06.30 ஆந் திகதியன்று வயது :
   வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

7. இப்பரீட்சை 1972, 1973, 1974, 1975, 1976, 1978, 1979, 1980, 1982, 1983, 1984, 1985, 1986, 1987, 1988, 1989, 1991, 1996, 1999 மற்றும் 2001 ஆகிய ஆண்டுகளில் நடாத்தப்பட்ட பொது எழுதுநர் சேவையின்/ 1985, 1999 அரச தட்டெழுத்தாளர் சேவையின்/ 1996 அரச சுருக்கெழுத்தாளர் சேவையின்/ 1999 அரச கணக்குப் பதியுநர் சேவையின்/ 1999 அரச சிறாப்பர் சேவையின் அல்லது 1999 அரச பண்டகசாலை காப்பாளர் சேவையின் அல்லது 2006 ஆம் ஆண்டு நடாத்திய அரச முகாமை உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்புக்கு தரமுயர்த்தும் மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சைகளில் எதற்காவது நீங்கள் தோற்றினீர்களா ? :----.

8. (i) பொது எழுதுநர் சேவைக்கு/ அரச தட்டெழுத்தாளர் சேவைக்கு/ அரச சுருக்கெழுத்தாளர் சேவைக்கு/அரச கணக்குப் பதியுநர் சேவைக்கு/அரச சிறாப்பர் சேவைக்கு/ அரச பண்டசாலை காப்பாளர் சேவைக்கு நியமனம்பெற்ற திகதி :----.

   (ii) 2007.06.30 ஆந் திகதியில் அதில் மொத்தச் சேவைக்காலம் :
   ஆண்டு [ | ] மாதம் [ | ] நாட்கள் [ | ]

   (iii) 2006.06.30 ஆந் திகதிக்கு உடன் முந்திய 5 வருட காலப் பகுதிக்குள் பெற்ற சம்பளமற்ற விடுமுறை நாட்கள் :----.

   (iv) 2007.06.30 ஆந் திகதிக்கு முனைப்பான சேவைக்காலம் :
   ஆண்டு [ | ] மாதம் [ | ] நாட்கள் [ | ]

(v) பொது எழுதுநர் சேவையில்/தட்டெழுத்தாளர் சேவையில்/ அரச சுருக்கெழுத்தாளர் சேவையில்/ அரச கணக்குப் பதியுநர் சேவையில்/ அரச சிறாப்பர் சேவையில்/ அரச பண்டசாலை காப்பாளர் சேவையில் நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----.

(vi) தற்போது இருக்கின்ற வகுப்பும் அதில் உள்வாங்கப்பட்ட திகதியும் :----.

(vii) நீங்கள் பட்டதாரி ஆயின் பட்டம் பெற்ற ஆண்டும் பல்கலைக்கழகத்தின் பெயரும் :----.

(viii) பட்டம் செயல்வலுப் பெறும் திகதி (Effective date) :----.

9. (i) நீங்கள் பொது எழுதுநர் சேவைக்கு/அரச தட்டெழுத்தாளர் சேவைக்கு/ அரச சுருக்கெழுத்தாளர் சேவைக்கு/ அரச கணக்குப் பதியுநர் சேவைக்கு/அரச சிறாப்பர் சேவைக்கு/ அரச பண்டசாலை காப்பாளர் சேவைக்கு சேர்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் :----.

(ii) போட்டிப் பரீட்சை இன்றி நீங்கள் பொது எழுதுநர் சேவைக்கு/ அரச தட்டெழுத்தாளர் சேவைக்கு/ அரச சுருக்கெழுத்தாளர் சேவைக்கு/அரச சிறாப்பர் சேவைக்கு/ அரச பண்டசாலை காப்பாளர் சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பின் குறித்த சேவைக்குச் சேர்வதற்காக நீங்கள் தகைமையடைந்த மொழி மூலம் :----.

10. **விண்ணப்பதாரரின் உறுதியுரை** :

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய அளவில்,

(அ) 2007.06.30 ஆந் திகதிக்கு உடன் முந்திய 05 வருட காலத்திற்கு கிடைக்கவேண்டிய சம்பள ஏற்றங்கள் எல்லாம் உழைத்துப் பெற்றுள்ளதுடன் (சேவைகள் மற்றும் திணைக்களப் பரீட்சைகளை நடாத்தும் நிபந்தனையான சம்பள ஏற்றம் தவிர்ந்த) அக்காலப் பகுதிக்குள் எவ்விதத்திலான ஒழுக்காற்று தண்டனையொன்றுக்கும் ஆளாகவில்லை எனவும்,

(ஆ) இவ்விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மை யானவை எனவும் நான் முதற்தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுவதால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவை இல்லை எனவும்/ பரீட்சைக் கட்டணம் செலுத்திய .................................. ஆம் இலக்க, ....................... ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதென்றும்/ பரீட்சைகள் பற்றிய ஒழுங்குவிதிகளுக்கு அமைய இப்பரீட்சை பற்றிய பிரமாணத்தின்படி நான் தகைமை அற்றவர் என தெரியவந்தால் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எத்தகையதுமான எத்தீர்மா னத்திற்கும் நான் உடன்படுகிறேன் என்றும்

இத்தால் உறுதியுரைக்கிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை** :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ...................................... ............... எனும் விண்ணப்பதாரர் .................................. ஆந் திகதி முதல் இவ் அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் என்றும், அவரின் வேலை மற்றும் நடத்தை நிதமும் திருப்திகரமானதென்றும், மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் இவ்வலுவலகத்தில் உள்ள பதிவுகளின் ஆதாரமாக என்னால் தனிப்பட்ட முறையில் பரிசீலிக்கப்பட்டதென்றும் அவை சரியானவை என்றும், அவர் வர்த்தமானி அறிவித்தலில் இலக்கம் 04 இன்கீழ் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளார் எனவும், இவர் முதல் முறையாக பரீட்சைக்குத் தோற்றுவதால் பரீட்சைக் கட்டணத்தில் இருந்து விலக்களிப்பதற்கு தகுதியுடையவர் எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 13 ஆம் இலக்க 1972.10.02 ஆந் திகதிய சுற்றறிக்கை கடிதப்படி அலுவலரின் வரலாற்றுத் தாளில் அதுபற்றி குறிக்கப்பட்டதென்றும் 2008, ................................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன். இவர் அரச முகாமை உதவியாளர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட கடிதத்தின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ........................... ஆம் இலக்கமும் .......................... ஆந் திகதியுமாகும்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

சான்றுப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை அதன்மேல் மூலையில் மட்டும் பசை தடவி கழறாதுவாறு ஒட்டிவிடவும். |

8-564

---

## தேர்தல்கள் திணைக்களம்

### அமய அடிப்படையில் முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2008

மேற்குறித்த போட்டிப் பரீட்சைக்குத் தகைமை பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கொழும்பு, யாழ்ப்பாணம், ஆகிய நகரங்களில் இப்பரீட்சை நடாத்தப்படும். கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களின் நகர இலக்கங்களை தொடர்ச்சியாக 1, 2 என குறிப்பிட வேண்டுமென்பதையும் விண்ணப்பப்பத்திரத்தில் அந்நகரங்களை ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களால் எழுத வேண்டும் என்பதையும், விண்ணப்பிக்கின்ற நகரத்தை பின்னர் மாற்றுவதற்கான இடமளிக்கப்பட மாட்டாதென்பதை யும் கவனத்திற்கொள்ளவும்.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலம் நடாத்தப்படுகின்ற எழுத்துமூலப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளுக்கிணங்க திறமை அடிப்படையில் தகைமையைப் பூர்த்திசெய்கின்ற பரீட்சார்த்திகள் அமைய அடிப்படையில் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படுவர்.

3. **நாட்சம்பளம்**.- 06/2006 (IV) ஆம் இலக்க 2007.08.24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கைக்கிணங்க அரசாங்க முகாமைத்துவ

உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்பிற்குரிய சம்பள அளவுத் திட்டத்தின் ஆரம்ப திட்டத்துக்கமைவான நாட்சம்பளக் கொடுப்பனவும் உரிய ஏனைய படிக் கொடுப்பனவுகளும்.

4. இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு ஒரு வருடத்திற்கான அமைய அடிப்படையில் மாத்திரமே மேற்கொள்ளப்படும்.

5. **தகைமைகள்**.- அமைய அடிப்படையில் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு கீழ்வரும் தகைமைகள் காணப்படல் வேண்டும் :

5.1 (அ) இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும் ;
(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 30 வயதைத் தாண்டாதவராகவும் இருத்தல் வேண்டும் ;
(இ) சிறந்த நடத்தையை உடையவராக இருத்தல் வேண்டும் ;
(ஈ) கீழ்வரும் கல்வித் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

5.2 தாய்மொழி, கணிதம் உள்ளிட்ட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் கூடிய க.பொ.த.(சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

5.3 முதலாம் தடவையின் பின்னர் தோற்றிய க. பொ. த. (சா. த.) பரீட்சையொன்றில் தாய்மொழி தவிர்ந்த சிங்களம்/ தமிழ் மொழி அல்லது விருப்பத்திற்குரிய சிங்களம்/ விருப்பத் திற்குரிய தமிழ் அல்லது இரண்டாம் மொழி சிங்களம்/ இரண்டாம் மொழி தமிழ் பாடத்திற்காக திறமைச்சித்தி பெற்றிருத்தல் கட்டாயமாகும். அத்துடன்,

5.4 க. பொ. த. (உயர்தர) பரீட்சையில், பொதுச் சாதாரணப் பரீட்சை, சாதாரண ஆங்கிலம் தவிர்ந்த அனைத்து பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல், பழைய பாடத்திட்டத்திற்கமைய 03 பாடங்களில் ஒரே முறையில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.

6. **பரீட்சை படிமுறை**.- பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டது :-

| | | காலம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| (1) | உளச்சார்பு | 1 மணித்தியாலம் | 100 |
| (2) | மொழி ஆற்றல் | 1 1/2 மணித்தியாலம் | 100 |

*மொழி ஆற்றல்*.- இவ்வினாப்பத்திரம் பரீட்சார்த்திகளின் கருத்து வெளிப்படுத்துகை, கிரகித்தல், எழுத்துப் பிரயோகம், இலகு இலக்கணப் பயன்பாடு என்பன தொடர்பான அறிவைப் பரீட்சிக்கின்ற சிறு வினாக்களைக் கொண்டிருக்கும். விண்ணப்பதாரிகள், சிங்கள மொழி ஆற்றல் வினாப்பத்திரத்தில் காணப்படும் தமிழ் மொழியுடன் தொடர்பான வினாக்களுக்கும் தமிழ் மொழி ஆற்றல் வினாப்பத்திரத்தில் காணப்படும் சிங்கள மொழியுடன் தொடர்பான வினாக்களுக்கும் விடை யளித்தல் வேண்டும்.

*உளச்சார்பு*.- இவ்வினாப்பத்திரம் பரீட்சார்த்திகளின் எண்ரீதியான, தர்க்கரீதியான, ஆற்றல்கள், புத்திக்கூர்மை என்பவற்றை அளவிடத்தக்கவாறான சிறு வினாக்களைக் கொண்டிருக்கும்.

(கடமை நடவடிக்கைகளுக்காக பரீட்சார்த்திகளின் தகைமைகளையும் மொழி ஆற்றலையும் பரீட்சிப்பதற்காக இவ்வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படுகின்றன.)

இது ஒரு போட்டிப் பரீட்சையாகக் காணப்பட்டபோதிலும் நியமனம் செய்யப்படுவதற்குத் தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு பாடத் திற்குமென குறித்தொதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக்குறைந்தது 40 புள்ளிகளையாவது பரீட்சார்த்திகள் பெறவேண்டுமென்பதோடு மொத்தப் புள்ளிகளில் ஆகக்குறைந்தது 50% புள்ளிகளையாவது பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். குறித்தொதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை நிரப்புவதற்கு போட்டிப் பரீட்சையில் பெறப்படுகின்ற புள்ளிகளின் ஒழுங்குமுறை கட்டாயம் நடைமுறைப் படுத்தப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும்.

7. **போலித் தகவல்களுக்கான தண்டனைகள்**.- விண்ணப்பத் தினை நிரப்பும்போது மிக அவதானமாக இருந்து உண்மையான தகவல்களை மாத்திரம் வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு அமைய எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவரின் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும்போதோ அல்லது பரீட்சையின் பின்னரான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச்செய்ய முடியும். விண்ணப்பதாரி ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச்செய்ய முடியும். விண்ணப்பதாரி ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிழையானது எனத் தெரியவரின் அவரை சேவையிலிருந்து நீக்கவும் முடியும்.

8. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 250 ஆகும். இப்பணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 4000-20-03-20-13 ஆம் இலக்க செலவுத் தலைப்பின்கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் மாவட்ட செயலகத்திலும் செலுத்தலாம். அதற்காக விநியோகிக்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டில் கழன்று விடாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை எதிர்கால பயன்பாட்டுக்காக அருகில் வைத்திருத்தல் வேண்டும்.) எந்தக் காரணத்துக்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாதென்பதோடு காசுக் கட்டளைகளோ முத்திரைகளோ கையேற்கப்பட மாட்டா.

9. விண்ணப்பப்படிவங்களில் லீகல் (செ. மீ. 22 x 35) அளவுடைய தாளைப் பயன்படுத்தி,

(அ) இல. 01 முதல் 4.1 வரையிலான பந்திகளை முதலாம் பக்கத்திலும்,
(ஆ) இல. 4.2 முதல் உள்ள பந்திகள் அடுத்த பக்கத்திலும் உள்ளடக்கப்படத்தக்கவாறு தயாரிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப்பத்திரம் தயாரிக்கப்படுகின்றபோது அதன் தலைப்பில் காணப்படும் பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்பத்திரத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியினாலும் தமிழ் விண்ணப்பப்பத்திரத்தில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியினாலும் எழுதப்படல் வேண்டும். குறித்த மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்படாத, முறையாக நிரப்பப்படாத விண்ணப்பப்பத்திரங்கள் எவ்வித அறிவித்தலு மின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்பத்திரத்தின் புகைப்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாக விருக்கும். பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப் பத்திரம், அறிவித்தலில் காணப்படும் மாதிரிக்கு இணங்கு கின்றதா வென விண்ணப்பதாரிகள் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும்.

9.1 விண்ணப்பப்படிவம் அனுப்பிவைக்கப்படுகின்ற கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் விளிம்பில் "தேர்தல்கள் திணைக்களத்திற்கு அமைய அடிப் படையில் முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்ப் புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2008" எனக் குறிப்பிடவும்.

9.2 விண்ணப்பப்பத்திரத்தில் உள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபரொருவர், சமாதான நீதவானொருவர், சத்திய ஆணையாளரொருவர், பிரசித்த நொத்தாரிசொருவர், முப்படையின் அத்திட்சகர் அதிகாரமுள்ள அலுவலர் ஒருவர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் ஒருவர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் ஒருவர், வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபா 2,37,060 அல்லது அதற்குக் கூடுதலான தொகையைக் கொண்ட அரசாங்கத்தின் நிரந்தர பதவியொன்றை வகிப்பவரு மான அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத் தப்பட்டிருத்தல் வேண்டும்.

9.3 நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2008.09.22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் :-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்ல.

10. **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத் தினால் அது தொடர்பான அறிவித்தலொன்று செய்திப் பத்திரிகைகளில் வெளியிடப்படும். அவ்வறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றபின்பும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதிருந்தால் அறிவித்தலில் உள்ளவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் உள்ள விண்ணப்பப்பத்திரத்தினதும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்படப் பிரதியுடன் பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டையும் கொழும்பிற்கு வெளியேயாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்ட உங்கள் கோரிக்கைக் கடிதத்தை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் மிகவும் பயனுடையதாகவிருக்கும்.

11. பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழ்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலைய அதிபதியிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் விநியோகிக் கப்பட்ட செல்லுபடியான தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு.

பரீட்சையன்று பரீட்சை நிலைய அதிபதியிடம் உங்கள் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

12. பரீட்சை நடாத்தப்படும் திகதி, பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் உரிய காலப்பகுதியில் அறிவிக்கப்படும். விண்ணப்பதார ரொருவருக்கு அனுமதி அட்டையொன்று விநியோகித்தல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக கருதப்படுதலாகாது. பரீட்சை நடாத்தப்படுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட வேண்டியுள்ளனர். அச்சட்டங்களை மீறுவார்களாயின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாதலும் வேண்டும்.

13. இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரினால் தீர்மானம் எடுக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட் டுள்ள பொதுப்பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைவாக ஒழுகக் கடமைப் பட்டுள்ளனர்.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் திணைக்களம்,
சரண மாவத்தை,
ராஜகிரிய,
2008, ஓகத்து 15.

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேர்தல்கள் திணைக்களத்திற்கு அமைய அடிப்படையில் முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2008**

Open Competitive Examination to Recruitment as Casual Management Assistants for the Department of Elections - 2008

(தரப்பட்டுள்ள கூட்டுக்குள் சரியான குறியீட்டை/ இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிடுக.)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]

(உரிய எழுத்தை கூட்டினுள் எழுதவும்)

வர்த்தமான அறிவித்தலுக்கிணங்க விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கின்ற நகரத்தைக் குறிப்பிடவும் :-

கொழும்பு - 1
யாழ்ப்பாணம் - 2

நகரம் [ ] நகர இலக்கம் [ ]

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

1. பெயர் :

1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ----.
(உதா : CHATHURANGI, K.W.V.)

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய ஆளடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.

2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

3.

3.1 பால் :
பெண்-1, ஆண்-0 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 2008.09.22 ஆந் திகதிக்கு வயது :

ஆண்டுகள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :-
(i) பரீட்சை நடாத்தப்பட்ட ஆண்டும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டெண் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.2 தாய்மொழி தவிர்ந்த சிங்களம்/தமிழ் விருப்பத்திற்குரிய சிங்களம்/விருப்பத்திற்குரிய தமிழ், இரண்டாம் மொழி சிங்களம்/இரண்டாம் மொழி தமிழ் சித்தியடைந்த க. பொ. த. (சா. த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :-

(i) பரீட்சை நடாத்தப்பட்ட ஆண்டும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டெண் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

4.3 க. பொ. த. (உ. த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :-
(i) பரீட்சை நடாத்தப்பட்ட ஆண்டும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டெண் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5. வேறு தகைமைகள் :

6. நீர் ஏதேனும் குற்றச்சாட்டுக்காக ஏதேனும் ஒரு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? :-

ஆம் ☐ இல்லை ☐

(உரிய கூட்டில் "✓" எனக் குறியிடவும்.)
"ஆம்" எனின் விபரங்களைத் தரவும்) :----.

7. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :-

(i) பரீட்சை கட்டணம் கொடுப்பனவு செய்யப்பட்ட அலுவலகம் : ----.
(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :----.
(iii) கொடுப்பனவு செய்யப்பட்ட திகதி :----.

| பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இங்கு ஒட்டவும் |
|---|

(புகைப்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளவும்)

8. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்தவரை உண்மையானவையும் சரியானவையும் என கண்ணியமாக வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனும் ஒரு பகுதி நிரப்பப்படாமையினாலோ அல்லது பிழையாக நிரப்பப்பட்டமையால் ஏற்படக்கூடிய இழப்பினை தாங்கிக்கொள்ள நான் இணங்குகின்றேன். அத்தோடு இதிலுள்ள அனைத்து பகுதிகளும் சரியாக நிரப்பப்பட்டுள்ளதெனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் மேற்கொள்ளப்பட்ட இவ்வெளிப்படுத்துகை பிழையானது என நிரூபிக்கப்பட்டால் நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் தகைமையற்றவர் எனவும், நியமனம் செய்யப்பட்டதன் பின்னராயின் சேவையிலிருந்து நீக்கப்பட முடியும் எனவும் நான் அறிவேன்.

(இ) இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகள் அனைத்தையும் கடைப்பிடிக்க நான் இணங்குகின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ---------------- என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரிந்தவர் எனவும், அவர் அவள் எனது முன்னிலையில் ---------------- ஆந் திகதி தனது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----------------,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

திகதி :----.

கையொப்பத்தை உறுதிப்படுத்திய அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதி செய்யவும்.)

8-595

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.